


# உலகத் தமிழ்ச் செம்மொழி

## —ஓர் சிறப்பு

பா. பிரதீப்குமார்

ஒட்டு மொத்த உலகத்தையும் ஒருசேர திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது கோவையில் நடக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு. இதுவரையில் எட்டு உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றாலும் ஒன்பதாவதாக செம்மொழி அந்தஸ்துடன் நடைபெறும் முதல் மாநாடு என்பதால் இம்மாநாடு பெரும் சிறப்பைப் பெற்றுள்ளது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கவியரங்கங்கள், ஆய்வரங்கங்கள், தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையைப் பறைசாற்றுகின்ற காட்சிகள் தத்ரூபமாக அரங்கேற்றப்பட்டிருக்கின்றன. உலகில் எந்த மூலைக்குத் தமிழர்கள் சென்றாலும், கோவை எனப் பெயர் சொன்னால் 'உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்த இடமா?' என வியந்து கேட்கும் அளவுக்கு சாலைகள் மட்டுமல்லாது அனைத்துப் பணிகளும் தரம் பெற்றுள்ளன. கோவை மாநகர் மட்டுமின்றி, புறநகரிலும்கூட சுமார் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள், அதன் நடுவே பூங்காக்கள் என ஒட்டு மொத்த கோவையும் அழகுபடுத்தப்பட்டுள்ளது. இதனோடே ஆங்காங்கே சுவர்களில் தமிழ் இனக் கலாச்சாரத்தை விளக்குகின்ற படங்கள், வரலாற்றுச் சிறப்புகள் தத்ரூபமாக வரையப்பட்டுள்ளன.

மாநாடு நடக்கும் அவிநாசி பாதை தொடங்கி முக்கியப் பாதைகளில் செயற்கை நீரூற்றுடன் பூங்காக்கள், நடைபாதைகள் என அமைக்கப்பட்டுள்ளன. நகரெங்கும் வண்ண விளக்குகள் ஒளிர்வதோடு, தோரணங்கள் கட்டப்பட்டு, அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு கோவை நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது.

செம்மொழி மாநாடு அரங்கேறும் கொடிசியா வளாகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிஞர்கள் பங்கேற்கும் அளவுக்கு ஆய்வரங்கங்கள், உணவுக் கூடங்கள், பறவை வடிவிலான முகப்புகள், விளக்குகள், திறந்தவெளி கலையரங்கம், செயற்கைப் புல்வெளி, அழகிய நீரூற்றுகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

இனி செம்மொழித் தமிழ் மாநாட்டின் பிற சிறப்பம்சங்களைப் பார்ப்போம்.

மாநாட்டுப் பந்தலைப் பொறுத்தவரை, 400 அடி அகலம், 1080 அடி நீளத்துடன், 60 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பந்தல் வடிவமைப்பைப் பொறுத்தவரை பழங்கால மன்னர் காலத்தை நினைவுக்குக் கொண்டு வருவதுபோல் கூரைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பந்தலின் முகப்புப் பகுதி மட்டும் 3 லட்சத்துக்கும் அதிகமான பனையோலைகளைக் கொண்டு ராஜகோபுரம் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் உச்சியில் 50 கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. 80 அடி உயரத்தில் இரும்புத் தூண்கள் அமைக்கப்பட்டு, காற்றோட்ட வசதியுடன் பந்தல் அமைக்கப்பட்டிருக்கிறது. பந்தல் முழுவதும் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது.

1200க்கும் அதிகமான மின் விசிறிகள், இரண்டாயிரத்துக்கும் அதிகமான மின் விளக்குகள், மெகா சைஸ் பிளாஸ்மா டி.வி.க்கள் என இந்தக் காலத்து ஸ்டைலிலும் மாநாட்டுப் பந்தல் இருந்தாலும் உள்ளே சென்றால் பண்டைய காலத்து அரண்மனைதான் ஞாபகம் வருகிறது.

பந்தல் வளாகத்தைச் சுற்றிலும் 38க்கும் அதிகமான தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொட்டியிலும் ஐந்தாயிரம் லிட்டர் தண்ணீர் தேக்கி வைக்கும் அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மூன்று மணி நேரத்துக்கு ஒருமுறை தொட்டிகளுக்குக் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இதுபோக கண்காட்சி வளாகம், தமிழ் இணையதள மாநாடு வளாகம், உணவகம் மற்றும் மக்கள் கூடும் இடங்கள் என அனைத்து இடங்களிலும் தண்ணீர் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இதில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 'குடிநீர் இல்லை' என்ற பேச்சுக்கு இடமில்லாமல் தண்ணீர் தீர்ந்துபோனால் உடனுக்குடன் தண்ணீர் விநியோகம் நடக்கும்படி பைப் லைன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மிக முக்கியமாக மாநாட்டுக்கு வரும் பொதுமக்களின் பசியைப் போக்க 480 சாப்பாடு கவுண்டர்கள் அமைக்கப்பட்டிருக்